NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 30 May 2017

### இ.டபிள்யூ. பார்க்கர் சட்ட, வணிகக் கல்வி மையத்தை திறந்துவைத்து பிரதமர் வலியுறுத்து

# காலத்துக்கு ஏற்ப சட்டமும் வழக்கறிஞரும் மாற வேண்டும்

சிங்கப்பூரின் சட்டங்களும் வழக்கறிஞர்களும் காலத்திற்குப் பொருத்தமாக, ஆகப் புதிய நிலவரங்களுக்கும் போக்குகளுக்கும் ஏற்றபடி திகழ்ந்து போட்டித்திறன் அனுகூலத்தைக் கட்டிக்காத்து வரவேண்டியது மிகவும் முக்கியமானது என்று பிரதமர் லீ சியன் லூங் வலியுறுத்தி இருக்கிறார்.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கை தொடர்பான ஆய்வுகளில் சிங்கப்பூரில் மிகவும் நம்பத்தக்க அமைப்புகளில் அதன் நீதித்துறை ஒன்று என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை திரு லீ குறிப்பிட்டார்.

உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் சிங்கப்பூரின் சட்டமுறை மதிக்கப்படுகிறது. போற்றப்படுகிறது. இதனால் போட்டியாளர்களிடமிருந்து சிங்கப்பூர் தனிப்பட்டு தனிச்சிறப்புடன் திகழ்வதாகத் திரு லீ குறிப்பிட்டார்.



பிரதமர் லீ சியன் லூங் (இடது), நேற்றைய நிகழ்வில் இ.டபிள்யூ. பார்க்கர் குடும்பத்தாருடன் படம் எடுத்துக் கொள்கிறார்.

படம்: சாவ் பாவ்

பிரதமர் லீ, நேற்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (என்யுஎஸ்) சட்டத்துறையில் இ.டபிள்யூ. பார்க்கர் சட்ட வணிகக் கல்வி மையத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

உலகமும் தொழில்துறைகளும் இடைவிடாமல் மாறிவருவதால் சட்டங்கள் மாற்றமடையாமல் அப்படியே இருந்துவிட முடியாது என்றார் அவர். உலகமயம் தொழில்நுட்ப மாற்றம் காரணமாக தொழில்துறை செயல்படும் முறை மாறுகிறது.

புதிய புதிய பாணிகள் தோன்றுகின்றன. மின்னணு வர்த்தகம் எல்லை கடந்து நடக்கிறது. அதற்கு வலுவான அமலாக்க ஏற்பாடுகள், வரிவிதிப்பு ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

அறிவுச் சொத்து பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு ஆகியவற்றுக்குத் தெள்ளத்தெளிவான விதிமுறைகளும் ஆற்றல்மிக்க பாதுகாப்பு ஏற்பாடுகளும் தேவைப்படுகின்றன. அவசரகால தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற புத்தாக்க ஒழுங்குமுறை அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன.

இந்தச் சூழலில் சிங்கப்பூரின் சட்டங்களும் வழக்கறிஞர்களும் காலத்துக்கு ஏற்ற நிலையில் திகழ வேண்டும் என்று திரு லீ குறிப்பிட்டார். இதற்குப் புதிய இ.டபிள்யூ. பார்க்கர் சட்ட வணிகக் கல்வி மையம் உதவ முடியும் என்று அவர் விளக்கினார்.

ஆய்வு, போதனை வழியாக இந்த மையம் உதவ முடியும் என்று கூறிய திரு லீ, இந்த மையத்தின் உதவிகள் நடைமுறைக்கு ஏற்றவையாக, சிங்கப்பூரர்களின் வாழ்க்கையை மேம்படுத்தி சிங்கப்பூரின் மேம்பாட்டிற்கு உதவுபவையாக இருக்கவேண்டும் என்றார்.

புதிய மையத்தின் அக்கறை எல்லாம் வெறும் கொள்கை கோட்பாடுகளுடன் அல்லது ஆய்வு அறிக்கை வெளியீடுகளுடன் மட்டும் இருந்துவிடக்கூடாது என்று குறிப்பிட்ட திரு லீ, புதிய மையம் சிங்கப்பூரையும் இந்த வட்டாரத்தையும் சேர்ந்த தொழில் துறையாளர்களையும் நிறுவனங்களையும் கொள்கை வகுப்பாளர்களையும் வழக்கறிஞர்களையும் ஈடுபடுத்தி வரவேண்டும் என்று வலியுறுத்தினார்.

புதுப்புது சட்ட மேம்பாடுகளுக்குப் பொருத்தமான நிலையில் நாம் இருப்பதை உறுதிப்படுத்த புதிய யோசனைகளை, கொள்கைப் பரிந்துரைகளைச் செய்யும்படி புதிய மையத்தைத் திரு லீ கேட்டுக் கொண்டார்.

இதன் மூலம் ஆசியாவில் தொழில்களை நடத்துவதற்கு விருப்பமான ஓர் இடமாக சிங்கப்பூர் தொடர்ந்து திகழ முடியும் என்றார் அவர்.

திரு பார்க்கர் சிங்கப்பூருக்கும் சமூகத்திற்கும் தொடக்கம் முதலே ஆற்றி வந்த தொண்டுகளைக் குறிப்பிட்டு அவரைப் பெரிதும் பாராட்டிய திரு லீ, திரு பார்க்கர் பெயரைத் தாங்கியிருக்கும் புதிய சட்ட வணிகக் கல்வி மையம் அவருடைய பெயருக்கு ஏற்ப நடந்து, செழிப்புமிக்க சிங்கப்பூரை உறுதிப்படுத்த உதவும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த மையத்தின் மனிதவள ஆற்றலை விரிவுபடுத்த உதவும் வகையில் மொத்தம் $21 மில்லியன் திரட்டப்பட்டு உள்ளது. இதில் 11 நன்கொடையாளர்கள் கொடுத்த கொடையும் அரசாங்கம் வெள்ளிக்கு வெள்ளி என்ற கணக்கில் கொடுத்த தொகையும் அடங்கும்.

இவ்வேளையில் 'என்யுஎஸ்' இ. டபிள்யூ. பார்க்கர் சட்டப்படிப்பு உதவித்தொகை ஒன்றைத் தொடங்கி இருக்கிறது.

இதன்படி ஒவ்வோர் ஆண்டும் இரண்டு பேருக்குத் தலா $6,000 உதவித்தொகைக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.